17-6-24

முருகன் துணை.

# சிவசுப்பிரமணியர் பேரிலும் ஸ்ரீ மஹாவிஷ்ணு பேரிலும் பஜனைக் கீர்த்தனை.

இஃது

மதுரைஜில்லா

மேலூர்தாலூகா உள்கடை மலம்பட்டி

மகா-ா-ா-ஸ்ரீ

மு. கருப்பண அம்பலம் குமாரர்

சின்னத்தி அம்பலம் அவர்களால்

இயற்றப்பெற்று

ஷையாரால்

மதுரை

மகமதியன் பிரஸில் பதிப்பிக்கப்பெற்றது.

இதன் விலை) 1924. (அணா 5.

உ

வேராவிலை, லிங்காபட்டி கிராமம்

## பரளி என்ற முத்தமாநகரம்

# ப. முத்துச்சாமி தாஸரவர்கள்

இயற்றிய

## சாற்றுக்கவி.

தேனினுமினியதமிழே சிறந்திலகும் மலையம்பதிமேவு வானர்
வானிலும் புகழ்உறும் மகபதிகுலசின் ஞத்திவாக்காற்
பானலமேபுகழ் பரங்குன்ற மெஞ்ஞான பாலவடிவேலர்கீதம்
நானிலமெங்கினு மேமகிழ்ந்தேத்தியே நவின்றான்மாதோ.

77577

உ

# சிவசுப்பிரமணியர்பேரிலும், ஸ்ரீமஹாவிஷ்ணுபேரிலு

# பஜனைக்கீர்த்தனை.

---

RJ:417
N24

## விநாயகர் விருத்தம்

நாதபூஜித வேதவிநாயகர்
நாதசங்கீத சாதமுழங்கிடும்
நாதரஞ்சிதனை ஜெயந்தரும்
நாதனின் மலற்றாளிணை காப்பதே

## விநாயகர் துதி.

இராகம் காட்டை தாளம் ஆதி
திருமந்திரக் குணனே என்ற மெட்டு.

1 மூஷிக கணநாதா ஓம் ஓம்
முனிசுகவிக நீதா ஓம் ஓம்

அநுபல்லவி

2 பூசித மலர்போற்றும் புகழ் ஜெயக்யாதா
புரபலன்பணி வேதா ஓம் ஓம் மூஷி

3 தேசிகவரத் தேவா ஓம் ஓம்
ஜெயமங்களப் பூவா ஓம் ஓம்
ஆசையுடஞ் சின்னுத்தி நேசப் பிரக்யாதா
அருள்புரிந்திட வாவா ஓம் ஓம் மூலதி

---

இராகம் மத்யவதி தாளம் ஆதி

பல்லவி.

1 கஜமாமுக ஜெனமே கழருவேன்
கபிலாயின தனமே ஜெயவரத (க)

அநுபல்லவி

2 நிசமே ஜெயமென நின்மலரேத்தி
நினைப்போர்க் கருள்புரிவாய் குருமூர்த்தி (க)

சரணம்

3 ஓம் சுமுகாயென வேஉருவேத்தி
ஓங்குஞ் சங்கதியுக ழேதிரு நேத்தி
பாம்பணி சிவஞ்சுத னேஉனை வாழ்த்தி
பஜனையில் உனதிரு பதமலர் சாத்திக் (க)
4 லம்போ தரசுக ஞானத்தை தேடி
நாணிலம் புகழச்சங் கீதங்கள் பாடி

நம்பு மடியவ ரதிக மேலாடி
நன்னெறி முறைகளா னந்தங்கொண் டாடி

5 அருளா னந்தக்குரு வேகண நாதா
அரிஓம் பிரணவத் தைங்கரத் வீதா
திருலோக ரும்புகழ்ந் திடும்சுக நீதா
சிறியே னுரைபன்சின் னுத்திசொல் பிரீதா (க)

---

## சரஸ்வதி துதி

### காவடிச் சிந்துப் பியாண்டு

1 கலபம் பொங்கும் பலவித நலசங்கம் பரிமளசுப
காருண்ய கல்யாணியே சுபமிகு
நேர்புண்யங் கொள் வாணியே

கங்கணஞ் சிறந்திலங்கும் மங்களஞ்ஜெய பிரசங்க
காக்ஷிதந்தேயருள் வாயே ஜெயகன
மோக்ஷங்கொண்டே தருந்தாயே

2 தினமுஞ் சங்கங்கோடி யருளைநம்பிகும் பிடுபவர்
தீபார்த்தங்கொள் சாரதா புவிமிசை
பூபாலர் போற்றுஞ் சதா

திங்கள்சேர் சதங்கை கொஞ்சும் அங்கமே புகழ் திலங்கும்
தேவியுன் காக்ஷி தந்தா ஜெயமிகு
புவியிற்க டாக்ஷி வந

ம மருவுந் துங்கஞ்சதுர் முகனுனை யென்றுந்தழு வுநதின
மங்கள வேதக் கியானி சதுர்மறை
தங்கும் பிரங்சங்க மேனி
காக்ஷிசேர் கடாக்ஷிதின மோக்ஷமே தந்தாளும் ஞானத்
தீக்ஷண்யம்பேர் தருவாயே சின்னுத்திமொழி
காக்ஷி தந்தேயருள் நீயே

---

## மீனும்பிகா துதி

இராகம் செஞ்சுருட்டி தாளம் ஆதி

சுயராஜ்யமதிக என்ற மெட்டு

1 மதுரைக் கரசிமகா ராசிசொக் கேசர் மண
மாது மீனுக்ஷியுன் மலர் துணையே
மகத்துவம் புரிநித்ய சுகஸ்தகல்யாணியே
மனமகிழ் வுனக்கினி யாரிணையே

செஜல்

மாதா நீயன்றி எனக்கா தாரமுண்டோ
ஒதாயிருக்கத் தகாது புவிஆண்டோ

யாட்டு

2 மலையத்துவசன் பயின்றுன கெம்பீரியே
மதலைமொழிக் குதவுஞ் சிங்காரியே
மனககளிப்புடனெந்தன் துணைக்குப காரியே
மகததுவமிருத் திடும் ஓங்காரியே

கெஜல்

நிச்சயசொரூபியே நீர்மலர் வேணியே
நினைக்கு மடியார்க் குதவி தந்தமணியே

பாட்டு

3 நேருஞ்சங்கடத் தரூத்தே யருள்வாயே
நேத்திரத்துக் குகந்த நிலைமை நீயே
தாருஞ் செந்தமிழ்கரு ளாதரிப்பாயே
தமியேன் சின்னுத்தி சொல் நீயறிவாயே

---

பரமசிவன் துதி

இராகம் கமாஸ் அடதாளம்

பல்லவி

ஆலமுண்டவா திரு நீலகண்டவா

அநுபல்லவி

காலனை யுதைத்த சோமா காமக்ஷிதா சிவா (ஆ)

சரணம்

1 காமனை எரித்த யோதா கமலபொற் கிதா
காமடந்தைமே லழுந்தாது கார்த்திடப்ரீதா
காரணக்கிரியா பரிபூரணப்ரியா (ஆ)

2 பார்பதி பாகாசீர் சொந்தபரம னேயிந்த
பாலன லங்கோல மிந்தவேளையே வந்தாள்
பாவலர்பாகா பரமேஸ்பரா சுகா (ஆ)

3 அஷ்டதிசை யுற்றதேவா அமரர் சற்கீதா
அடியேனிடர் பொடிபட என்னுவல் தீர்க்கவா
அகிலம் ஆண்டவா தில்லைஆடிடுந் தேவா (ஆ)
கங்கை அணிவோனே சிவசங்கரா தேவா
எங்கள் சுகபஜனையைக் கண்டே மகிழவா
ஈசா உன் கீர்த்தி தமிழ் ஓங்கும் சின்னுத்தி (ஆ)

---

இராகம் மத்யமாவதி தாளம் ஆதி
கலிலோ என்ற மெட்டில் சந்தச் சேர்க்கை

பல்லவி

சம்போசிவ சங்கர சரிகம சாயுச்ய கிரியோனே
சனிதகம (ச)

அநுபல்லவி

அன்பாய் மிருதிக லரகராவென அனுதினம் பணிந்தேனே
அரனேசிவ (சிவ)

சரணம்

1 வேதா கமமது வினவினேன் போதா
வேறே துணை எனக்கெதுவோ சொல் நீதா
நாதா கருணையோ டரசுசெய் வேதா
நடமிடுந்திடுங் கீதா நவிதமொழி (ச)

2 அத்தியை யுரித்துடை தரித்திடுந் தேவா
அடியவர்க் கிடரகற் றிடும்பிர தாவா

நித்தியசுகதிருக் களிமணப் பூவா
நினைக் கெனக்கரு ளீவா நிரஞ்சனமே (ச)

3 அரனேயென் றடிக்கடி அமரர் கொண்டாட
அகமகிழ்வுட னுன்முன் பஜனைகள் பாட
திரமதியு டனுமெஞ் செவிக்கின்பந் தேட
சின்னுதியின் தமிழ் பாட சிவஞானமே (ச)

---

சுப்பிரமண்யன் துதி

இராகம் தேசிகத் தோடி தாளம் ஆதி

பரமானந்தம் என்ற மெட்டில் சந்தமகுடம்

பல்லவி

1 மவுன கணம்புரிந்த சுகஞான மகத்வத் யானம் (ம)
மகிழ்வுட னிருதய சுககண ஜெகஜோதி (ம)

அநுபல்லவி

2 மண்டலங்க ளிசைதொண்டு கொண்டுலவும்
தண்டை கெண்டைகள் சேகண்டி டண்டமென (ம)

முடுகு

3 மயில்குன கரஜெக விகசித மனவடி வேலன்
வேதாந்த மெச்சிய

4 கனமிகு மன்மகிழ் வுடனுனதடிபவ ரனுகூலன்
கோடான கோடி

5 படிமிசை உனதடி தொழுதிடுங் குடிகள் தயாளன்
கொண்டாட்டமான
6 சடையொடுமுடி யெடுபெடு தவுளடி யிடைபடர் வாலன்
ஞானக்குறளன்
7 கொம்புசங்கு வீணை தங்கும் மங்கள கல்யாணன்
கும்ரவேலன்
8 அங்கமெங்கு மேவிலங்குஞ் சங்கரணிபாலன்
சம்பிரமக்கோலன்
9 குங்குமப் புனுக தம்பணிந்த மேனியாளன்
வள்ளிக்கிசைந்த
10 கங்கணம் வளையனுங் துலங்குமேனி வேலன்
கண்டோர் களிக்க

சரணம்

11 கண்மிகு ஜெயகுண வரதகுறளன்
கவிமனமகிழ் உனதிருவடி பாலன்
மகபதி குளத்துதித் திடும்சிறு சீலன்
குகமெனவே சின்னுத்தி தவமனு கூலன் (ம)

---

இராகம் தாளம் ஆதி
அய்யா பழனிமலை வேலா என்ற மெட்டில் இருசு
கண்ணிகள்

1 மயிலதி குணசுக வடி வேலா ஜெக
மகிதலம் புகழுமை சீலா உயர்

மயல்மிகு குறவள்ளிலோலா திரு
மமக்கரி சமபதன் பாலா (ம)

2 பகவதி மகனெனுங் கோனே திருப்
பரங்கிரி தனிலிருப் போனே நல்ல
சுகமது புகழ்குணத் தோனே நதி
சரவணை தனிலுதித் தோனே (ம)

3 குறபுன வனமதுக் கடுத் தாய் வள்ளி
குணத்தை தொணித்துக் கரம்பிடித் தாய் வனத்
திரவேங்கை மரவடி வெடுத் தாய் மன
திடத்துடன் அசுரரை மடித்தாய் (ம)

4 முத்தமிழ் குகந்த சித்ர வேலா யுகம்
முழுதும் புகழுஞ்சத்தி பாலா தமிழ்
நத்திடுஞ் சின்னுத்தி வித்தை கேளாய் ஜெய
நவரச விகசித லோலா (ம)

---

இராகம் பியாகு தாளம் ஆதி

பல்லவி

கங்காதரன் பாலா கருணை வேலா (க)

அநுபல்லவி

1 மங்கை தெய்வானை லோலா மாமயிலனுகூலா
மகிதல விகசித மனமிகுத் தோனே
மதகரி யுரித்தவங் குலமுதித் தோனே (க)

2 பஞ்சாசரத் தோனேவா பாரோர் கொண்டாடுந் தேவா
பழமுதிர் பதிவளர் பரம குமாரா
பணிபவர் துயரருத் திடுமுப காரா (க)

3 சிங்கார வேல்முருகா ஸ்ரீநாரணன் மருகா
சிரகிரியான் முருகானந்த மோகஷா
திகிரிகளுடன் நடம்புரிந்திடும் சாகஷா (க)

4 விஞ்சை உரைத்த வேலா தஞ்சைநகர் குணலா
விரும்பிடுங் கரும்பெனத் துரும்பஞ் சொல் லேத்தி
விகசித வரமருள் குருவே சின்னாத்தி (க)

---

இராகம் ஆனந்த பைரவி சாப் தாளம்
கனவானதினெதிரே ஒருகனியானவள் என்ற மெட்டு

கண்ணிகள்

1 அரணுனருள் மகனே எனக்கருகாக வந்திருவா
அறியாதொரு சிறுபாலகன் தமிழாதர கிருபா
2 முருகாஉனை ஒருபோதிலு மறவாதிருப் பேனே
அருளா பரங்கிரி மேவிய அடியார் குணவானே
3 பரலோக வீபதி மேவியே தருவாய் திருப்பதமே
நரனென்றுடல் உருகொண்டதை மகிழ்கொண்டிடு
[குகனே
4 பதகங் கணமணிசங் கிணைஉலகெங்கினும் நாதம்
பணிபங்கையஞ் செவிவிஞ்ஞையில் தனிமந்திர கீதம்

5 பகலென்றித இரவோ எனக்கொரு சங்கதி உரையே
பகவன்திருசுதனே உனைபணிவே னெடுத்துரையே

6 சிகிவாகன மதிலேறியே மகிபாசிறு சீலன்
திகழாதிருவென ஓதிடு சின்னுத்தி பாலன் (ஆ)

---

தேன்ருேளிக்கும்பொன் என்ற மெட்டு

1 தேன்சொரிந்திடுந் தென்பழ யம்பதி எல்
லாந் துலங்கிடும் பம்பை முரசும் புகழ் சேர்
பாம்பணிந்த பரம்பொரு ளோங்குரு
பாலாசீர் பந்தமர
வேலா நீதங்கும்பரங் (தே)

2 மாமயில்நட மண்டலங் கண்டே மகிழும்
சேமமேபதி செங் கதிரோன்றங்கி வாழும்
கோமகள் தெய்வகுஞ்சரி நிரஞ்சனமே
கொண்டும் பேரண்டர் பதி
கண்டுமுன் தொண்டர் நிதி (தே)

3 மாதவர்க் குபதேசமனு பித்தவனே
பாதகத்தின் அசுரரை வதைத்தவனே
பூதலத்தில் மனத்துட னுதித்தவனே
போற்றுஞ் சங்கீத மொழி
சாற்றுஞ் சின்னுத்தி கவி (தே)

இராகம் செஞ்சுருட்டி தாளம் ரூபகம்

பல்லவி

அய்யா நல் வையாபுரியே
ஆடும் மயிலதிருண வடிவேல் (அய்)

அநுபல்லவி

துய்யா வடிவேல் முருகய்யா பரங்
கிரிமுத்தையா மெய்யா மணத் (அய்)

சரணம்

1 ஒய்யார வடிவமே ஓங்கும்பிர தாபமே
உச்சித ரக்ஷகர் மெச்சுப தெரிசன
சச்சனருக் கதி கிக்ஷயபுரி மனத் (அய்)

2 அண்டங் களுக்குருவே ஆறுமுகத் துருவே
அருணையம் பதிவளர் சரவண குணனே
குறமக ளுடசுக மிருந்திடு பவனே (அய்)

3 தேடக்கிட்டாத தங்கம் நாடோங்குஞ் சேதி சங்கம்
நானுட லெனக்கொரு திரமெடுத் துரைப்பாய்
அரகரா வரமருள் சிரகிரிக் குறிப்பாய் (அய்)

4 திக்கிகொண் டாடுவோனே திருப்பரங்கிரித் தேனே
சிவமணி மனமகிழ் தனகுண பாலா
சிறுமொழி எடுத்துசின் னுத்திசொல் கேளாய் (அய்)

பியாண்டு

பல்லவி

1 கந்தப்பா தென்பழனி காருண்யமே
இந்தப்பா வென்றுனருள் தாபுண்யமே

அநுபல்லவி

2 வந்தப்பா பந்தமருத்துன் தப்பாதே வந்திரு
வாகாக யோகா பொற்பாகாக வேவா நீ

தொகையரு

துடியான மயிலேரி நடமாடிப் புவிமீதில்
வடிவேலா வருவதெப்போ
படிகண்டு பேரின்பக் கரையொன்றுங் காணாத
அடியேனை கார்ப்ப தெப்போ

பாட்டு

3 வஞ்சத்தை நெஞ்சத்தில் கொஞ்சமுந் துஞ்சிடாது நீ
வாருங் களிதீருந் துயராரும்படி கூருஞ் சிவா (க)

தொகையரு

கல்லான நெஞ்சோ கரையாததோ பஞ்சை
கத்தினேன் நித்தம் நித்தம்
பொல்லாதோ னென்றெனை தள்ளாதே கெஞ்சினேன்
புண்ணியம் உனக்கோ சித்தம்

பாட்டு

4 போற்றிக்கொண் டேற்றினேன்கண் பார்தெந்துயர் தீர்திடு [முன்
போதாசின் னுத்திசொல் நீதாநீ ஏத்திக்கொள் (க)

---

இராகம் காம்போதி தாளம் ஆதி

காக்ஷி கண்காக்ஷியே என்ற மெட்டில் பின் மகுடம்

பல்லவி

கார்த்திகைத் தீபமே கண்டாலா வண்யமே திரு (க)

அநுபல்லவி

1 கருணை யுடையதிரு சரஹண பவனே
அரிமக ளிருதய மனமகிழ் குகனே
கண்டா லாவண்யமே
கார்த்திகை தீபமே நாம்

தொகையறு

அரனார்பயின்ற பரிபூரண புவியில்
ஆனந்தமான வேலா
குறமா தணைந்து மனமோ டிசைந்த
குகமே அறிந்த லோலா

பாட்டு

2 திருபரங்கிரி வளர் மகத்துவ காக்ஷி
மருக்கடம் பணிசிவ குருகந்த மாக்ஷி
கண்டா லாவண்யமே
கார்த்திகை தீபமே (க)

தொகையறு

தேவருலகுள்ளமுனி ஆவலுடனே யுனது
திருநாமந் தனிலுலவியே
மூவர்களும் மெச்சிடவும் நாவலர் தனக்குதவி
முருகானந்தப் பதவியே

பாட்டு

3 முனிஉரை தவறிடா வனமதுக் கடுத்தாய்
மொழி புகழுஞ் சின்னுத்தி தமிழ்சுக மடுத்தாய்
கண்டாலா வண்யமே
கார்த்திகை தீபமே (க)

இராகம் தேசிகத்தோடி தாளம் ஏகம்

பல்லவி

1 ஆதிதேவ னருளி லானவா வேலுமயில்
ஆனந்தம் ஆனந்தம் ஆடிவா

அநுபல்லவி

நாதன்றி ருப்பொருளே ஞான மோங்கு மருளே
வேதன்குலத் தருளே வேண்டினேன் உன்னருளே (ஆ)

தொகையறு

உமையாள் பயின்ற உலகாளும் ஞானி
ருத்ராக்ஷ கண்ட மணியே

இமைநாளு முந்தன் நினைவோடிருந்தேன்
ஏகாந்தரூப தொணியே

பாட்டு

2 ஓங்கார மந்திரனே வேலவா வேலுமயில்
நீங்காத தந்திரனுகூலா வா
தேங்காயபிஷேகனே தேனமிர்தக் குகனே
பாங்காய் பழனிமலை பார்பதி பாலா உன்னிலே (ஆ)

தொகையரு

பரமானந்தங் குருவே பாரோங்கிடுந் தருவே
பகராரு முகமானவா
குறமாதணைந்து உறவாடுகின்ற
குமரா சமேத தேவா

பாட்டு

3 தேவர்கொண் டாடுந்திருக்குன்றமே வேலுமயில்
செஞ்சேவ லத்தின லங்காரமே
சேவை தரும் முருகா சேயன்சொல் கேவருவாய்
பாவை தெய்வானை பாகா பாலன் சின்னுத்தியாள்வாய்(ஆ)

இராகம் சங்கராபரணம் தாளம் ஏகம்

எந்தன் சிங்கார கோகிலம் என்ற மெட்டு.

பல்லவி

சூலாயுதப்ரமானந்தம் சோமசுந்தரன்
பாலா உனக்கோ ரானந்தம்

அநுபல்லவி

1 ஆலமதனை யுண்ட நீலகண்டன் புதல்வா
கோலமயில் மீதேறி பாலன்முன் னேவருவாய்
ஆடி அன்பர்கள் முன்பு
காடி அருளுங் கீதம்
பாடி அனைவருங் கொண்
டாடி ஆனந்த கோடி
அங்கவலங்கின மங்கள வுன்புக
ழெங்கு முழங்கின சங்கரனுர் மகிழ் (சூ)

2 சேவல்கொடி துலங்கும் செந்திநக ரிலங்கும்
பாவை தெய்வானை பாகா பாலாபிஷேக யோகா
பாதம் பணிபவருன்
னீதம் பதங்க ளும்பிரக்
கியாதம் பகரருக்ர
வீதம் பாலர் சங்கீதம்

பக்தியு டன்துதி நித்த மூறைத்தவா
நத்திச் சின்னுத்தி பதத்தை பூரித்தவா (சூ)

---

இராகம் மத்யமாவதி தாளம் ஆதி
செந்தூரி லங்குந் தெய்வமே என்ற மெட்டு சந்தம்

பல்லவி

நித்யானந்தத்தின் வாசமே நினைப்பவர்க்கே
பக்தியுல்லாச நேசமே

அநுபல்லவி

சத்திசாக்ஷா ப்ரசங்கம்
சடாக்ஷர மதிகதிடப் படுதிருக (நி)

சரணம்

1 சமரச புவியதி லுலவிய பூமான்
சரசமாய்க் குறவள்ளி மருவிய நேமான்
கரகர வெனசூரர் சிரமருக் கோமான்
கலகல வெனமணி ஒலிபுக ளேமான் (நி)

2 திகிரிக ளொருபுரங் கரமணிந்திடு வோன்
சிகிநட மிடுவதில் மனமகிழ்ந்திடு வோன்
திகழ்மதி சடையனுக் கருளுரைத்திடு வோன்
திருபப்ரங் கிரிதனி லவதரித்திடு வோன் (நி)

3 சுகபதி யதிருள ஜலதர பாலன்
சுருதிய கலியுகப் புஜபலச் சீலன்
ஜெகமதிற் குகமய மெனும் நற்ற யாளன்
சிறுவன்சின் னூத்திசொல் லறியுங் குணாளன் (சி)

---

இராகம் தோடி தாளம் ஆதி
எப்ப மனவருமோ என்ற மெட்டு

பல்லவி

1 எப்ப நீ வருவாய் பாலன்
செப்புந் தமிழ் மனதொப்பி சுப்ர மண்யா

அநுபல்லவி

2 அற்புதவள்ளிக் காசைகொண்ட மூர்த்தி
கர்த்தன்றக்குப ஞானஞ்சொல் வாத்தி
இப்பிர பஞ்சத் திடுக்கங்காப் பாத்தி
இல்லற வில்லங்க தொல்லைவிட் டேத்திட (எ)

3 தாண்டவக் கூத்தாடுவா னுந்தன் தந்தை
சங்கரி பாலா சடாக்ஷர விந்தை
வேண்டா மடமங்கை வில்லங்கத் தொந்தை
வீணி லலைந்திடா நானிங் கிருந்திட (எ)

4 நித்தந்துதித்து நினைத்துன்னை பாடி
நின்றேன் சிரத்தின்மே லேத்திக் கொண்டாடி
அத்தன் றனக்குச் சொல் ஞானத்தைத் தேடி
அன்புங்கொண் டெங்கும் பேரின்பங் கொண்டாடி

5 கர்மவினைகள் கழன்று முன்னோட
கந்தனென்றே பஜனுமிர்தம் பாட
தர்மநெறி தொண்டர் தாளங்கள் போட
சங்கமர் போற்றச்சின் னுக்தி கொண்டாட

---

இராகம் தேசிகத்தோடி தாளம் ஏகம்

பல்லவி

சத்தி உமையாள் பயின்றசாயுச்யமே
சாயுச்யமே தமியேனுன் பக்ஷமே ஞான (ச)

அநுபல்லவி

1 நித்ய கதாம்பிர சித்தாநிஸ்கல சொரூப வித்தா
முத்தமிழ்துலங்கும்பத்தா மும்மூர்த்தியான கர்த்தா (ச)

2 மோகக் குறத்திமணப் பாகமுறைத்த குணம்
ஆகமத்தேபூவனத் தானந்தமாடு மோனம் (ச)

3 தேவாதி சுகமே தென்பழனி யுங்குகமே
நாவலர்க் கருள் தினமே நற்காக்ஷிதா குணமே (ச)

4 ஸ்ரீ நாரணன் மருகா சின்மயானந்த முருகா
செவிக் கின்பந்தந் திடுவாய் சேயனுக்கே குருவா (ச)

5 தோகைமயில் நடித்தாய் சுந்தரங்கு லத்துதித்தாய்
சேவலுடனே நடித்தாய் செஞ்சடை பரமவித்தா (ச)

6 திருமணக் குணமிகுத்தாய் தெய்வானை சுகனே கர்த்தா
மருமமில்லாது காத்தாள் மைந்தன் சின்னுத்தி சொல்தா

இராகம் தேசிகத்தோடி தாளம் ஆதி

---

பல்லவி

வேலாவுன் விரதங்கொண் டோருக் கருள்தா-வடி (வே)

அநுபல்லவி

வேகமயி லேறியே நீ பாகமனுகூல-வடி

1 ஆதினப்பதி யாசனத்தினி லேமிகுத்துநீ பூதலத்தினில்(வே

2 சேரினிற் பிரகாசமுற்றிடு தீபகற்பூர வாசகிற்கா (வே)

3 நாதகீத மோதபாத வேதநீத மெய்பிரசாதம் (வே)

4 சின்றுந் திருப்பரங் குன்றமெனக் கோடி சென்றும்
வரம்பெற என்றும் புகழ்வடி (வே)

5 நேசத்தாருமே கடாக்ஷத்தாருமே பூசித்தாருமே
பாசத்தார் வடி (வே)

6 இடையும் நடையுஞ் சடையுந் தினமே
கொடையும் படையும் திடமுன் னிடமே (வே)

சரணம்

7 அஞ்சலி செய்துனைக் கெஞ்சியே நாடி
அண்டம் நிறைந்தபூ வனமுங் கொண்டாடி
தெண்டம் புரிந்துசின் னத்தியும் பாடி
தேகயோகி யாக ஓடி
வேகமயி லேறி வடி (வே)

---

குகமயம் என்ற மெட்டு

பல்லவி

வாகனு வந்தாளுமா கதமயில் (வா)

அநுபல்லவி

மணிமாம தக்கனியே கீதப்பணியே குணத்தொணியே
மயில் (வா)

1 வனமேவிய குறமாமகள் தினமாவதே இனிவாகிய (வா)
அரக்கரைசிர மறுத்தவா
அமரருக்கருள் அளித்தவா
அடவாவன நடைமேவிய குடகாதினம் நடாமயில்(வா)

சரணம்

2 வரதசொந்த திறமிகுந்த குமரகந்த தினகரன்
பம் பம்பம் சங்கினேசை செந்திலம்பதிச் சரவணன்
வாத்ய கீதமே சின் ஞத்தி வேதமே
மவுனகரன் சுதனே உனைத்
தினசோபித ரமண மயில் (வா)

இராகம் தேசிகம் தாளம் ஆதி

பல்லவி

வள்ளிசமேதா வா நல் வரந்தரப் பரங்கிரி (வ)

அநுபல்லவி

1 புள்ளி மயிலின்மீது போன்றடி யார்கள் சாது
நல்லர வணிமகனே சிகி நடமிடுந்திடுங் குற (வ)
2 சூரர் குலமதனை வேரறச் செய்தவனே
பாரோர் கொண்டாடும் பவனேநற் பரகெதிதாகுற (வ)
3 குன்றடி யார்கள் தொழும் என்றிசை ஆடல்களும்
மண்டலந்தன்னி லென்னளும் மதிநிதி புகழ் குற (வ)
3 அண்டம் நிறைந்த சோதி ஆனந்தமான நீதி
தொண்டன் சின்னத்தி சொல் கியாதி ஜெய துடிகொடி
யிடை குற (வ)

இராகம் பியாகு தாளம் ஆதி

பல்லவி

பாலாபிஷேகப் பண்டிதா பாவை தெய்வானை
பாகமே லிட்ட சமேதா

அநுபல்லவி

பரையரை திரமிகு சரச மணாளன்
மறைநிறை ஜெயமிகு வரத குணாளன் (பா)

சரணம்

1 வள்ளி வனத்தினிற் சென்று வாதாடியிங்கே
வந்தமா னெங்கே யே என்று
வனமதில் தினமாவை வாரிக்கை கொடுக்க
தினகரமா வள்ளித் தின்றுகீழ் படுக்க (பா)

2 வேடக் குறவரைக் கண்டு பயங் தொளிந்து
வேங்கைமர மாக நின்று
விலகிய கிழவன்போல் தலைநரை பூண்டு
அழகிய வளையலைச் செலவிடக் கொண்டு (பா)

3 கும்பமுனிக் குபகாரன் கொண்டாடுவோருக்
கின்ப மளித்திடுந் தீரன்
குவலய முழுதிலும் பரவுங் கெம்பீரன்
சிவகிலை தவறிடா தருளும் ஒய்யாரன் (பா)

4 தேவர் கொண்டாடுஞ் செந்தூரா சின்னுத்தி செந்தமிழ்
தேடிமுழங்கும் கெம்பீரா
திகிகட மிடுசுக வாதகெம் பீரா
ததிங்கின தகிர்தையத் தோமெனச் சீரா (பா

துடிக்கும் மயிலில் என்ற மெட்டு
இராகம் பியாகு தாளம் ஏகம்
கண்ணிகள்

தண்டாயு தங்கொண் டாடுஞ்செந்தூரா ஷண்முகமூர்த்தி
1 சர்ச்சனர்கள் மெச்சுங் கெம்பீரா இந்த
சாகரங்களுக் காதரவதா சீர்மிகுத்திடு பூதலத் (த)
2 தீரவீமகா சூரனை வென்றாய் தேவர் கொண்டாட்
சேவலைக் கொடியாய்க்கரங் கொண்டாய் உயர்
தீனரக்ஷக ரானமெய்ச்சுப ஞானமெச்சுசந்தானசித்ர(த)
3 திருமதிலுடன் கோபுரத் தழகும் கண்டோர்களிக்க
ஜெகத்திலுங் கலியுகத்தி னிற்புகழும் ஜெய
தீரதுந்திமி காரணப்பரி பூரணஜெய ரான மந்த்ர (த)
4 கோடுகிரி குன்றை சுற்றியே கோடானகோடி
கோவில்வல மாக நத்தியே தினம்
கூவியே கரந்தாவியே சிரமேவினேன் வரந்தாவிதத் (த)

5 அனுதினமுன் திருமலர் போற்றி சின்னத்திலுந்தனை
அருளுஞ் செந்தமிழ் கவிகளா யேற்றி நட
மாடியுன்பதம் பாடி கீத்தங் கொண்டாடி வித்தகர்தேடிடத்

---

இராகம் தேசிகத்தோடி தாளம் ஆதி
வேகமயி லேறும் வேலா என்ற மெட்டு

1 அரிதிருமால் மருகா ஆறுமுகா யோகா (ஆ)

அநுபல்லவி

திருகார்த்தி கேயா
தேவர் வைபோகா (அ)

தொகையறு

சமரச மாகவே அரகராவென் றுன்னை
சாத்வீக மாகப் போற்றியே
குமரனே என்றுனை கோரினே மானதால்
குறைகளை வந்தகற்றி யே

முடுகு

2 சுந்தரன் மங்கையர் வந்து பணிந்திட
மந்திர சக்கர மெங்கு முலங்கிட
தோத்திரமே சின்னத்தி
கீர்த்தனமாக ஏற்றி (அ)

அமாநபி என்றமெட்டு

இராகம் தேசிகத்தோடி தாளம் ஆதி

பல்லவி

1 விகசிதனேவடி வேலாயுதம் ஆணையே

அநுபல்லவி

விகசிதனே உனை வேண்டிக் கொண்டேனே நானே (வி)

சரணம்

2 அகமகிழ்ந் தெனக்குன
தருள்புரி முருகையா
அற்புத தேவாமிர்தம்
அருந்தும் பன்னிருகையா (வி)

தொகையரு

ஆதாரம் நீயன்றி வேறெனக் கில்லையே
அன்பு பாராட்ட வாராய்
பாதார விந்தமே நீதா உகந்துமே
பந்தமத கற்ற நேராய்

பாட்டு

3 சந்ததம் போற்றினேன் வா
சடாக்ஷர ஞான தேவா
சாமியேயின் னுத்தி உந்தன்
நாமமதை ஏற்றினேன் (வி)

இராகம் தேசிகத்தோடி தாளம் ஆதி

பரமானந்தமே என்ற மெட்டில் சந்ததம்

பல்லவி

போவோம் நாமெல்லோருங் கூடி வெகு
புல்வர்க ளதிசுக ஜெகஜோதிபதி யிடம் (போ)

அநுபல்லவி

பொங்கரவன் புகழிங்கிதம் பாடி
மங்களவேத முழங்கியே தேடி (போ)

சரணம்

1 திரிபுர திரிமுனி புகழ்வனம் நாடுவான்
திணையதி கனிகுற மகளோவா தாடுவான்
அரிதிருமருகனே மயில்மிசை ஆடுவான்
அதிவிக சிதம்பெற வெகுகுண பதியிடம் (போ)

2 வரமது கொடுவென வழக்கது புரிவோம்
வகமயி லிதையிட வலம்புரிந் திடுவோம்
இரவியி லிருந்திடு பவனைக்கொண் டாடுவோம்
இடரதை யகற்றிடும் மவுனதேசிக னிடம் (போ)

3 கஜமுகன் சோதரன் சுகமென தேடி
கவலைக ளொழித்திட கவிகளைப் பாடி

விஜகோ புரதிரு மதில்தனை நாடி
விதிபரங் கிரிக்கும ரதிப்பிர சங்கரிடம் (போ)

4 வடிவே லுடனே துற மகள்மண பாகன்
வயிரமணிமுடிக ளணிந்திட்ட வாகன்
திடமுட குணசத்தி மகிழும் விவேகன்
சிறுவன்சின் றைத்திசொன்ன முருகன் பதியைக்காண(போ

குஞ்சரிமோக குமரா என்ற மெட்டு

இராகம் தாளம் ஏகம்

கண்ணிகள்

1 குமர பண்டித குகனே கரங்
குவித்தென் அம்பிகைச் சுதனே மங்களக் (கு)
கனத்த சினத்தால் அரக்கர் குலத்தை துணித்து
சிரத்தை தனித்த மகத்வ (கு)

2 மனமகத்துவ நேசி மயில்
மிசைதனித்த உல்லாசி கங்கணம் (ம)
மகரகண் டரை மண்டலத் தாண்டவா
அகரம் மூன்றெழுத் தக்ஷரம் பூண்டவா (கு)

3 வச்சிரக் காவடி வலமே வெகு
ரச்சகர் மெச்சிடும் ஸ்தலமே அக்ஷர (வ)
சற்சனர் மெச்சிடும் லக்ஷண தீபன்
அர்ச்சனைபட்ட ரதிகப்ர தாபன் (கு)

4 கஜமுகன் றனக்கிளைய யோன் பர
ஜெகஜோதி குணயிணை யோன் ஐங்கர (க)
கர்த்தன் றனக்கனு நித்தம் உரைத்தவா
நத்திச் சின்னத்திபதத் தனுபித்தவா (கு)

---

இராகம் தேசிகத்தோடி தாளம் ஏகம்

தாதா உன் தெரிசனமே என்ற மெட்டில் சந்தம்

பல்லவி

காவா கந்தா குகவேல்

அநுபல்லவி

1 கதிதரும்பர கேதி அடைந்திட
கருணைக்குரு யித்தருணம் வந்தேனை (கா)

சரணம்

2 அரவணிந்தவன் பாலா உன
தடியவர்க்கனு கூலா

அருள் சீலா உமை
பாலா வடி
வேலா திரு
அத்தன் றனக்குபதேச மளித்தவா
நித்திய சித்தப்ர சத்தி மகத்துவா (கா)

3 அசுரரைச் சிரம் அறுத்தாய் குல
அரக்கரைச்சிறை தொடுத்தாய்
வெகு சினத்தாய் மனங்
களித்தாய் புஜ
பலத்தாய் மிக
உத்தமி சித்திரக் குறத்தி மகத்துவா
நத்திச் சின்னுத்தி பதத்தை பூரித்தவா (கா)

---

இராகம் தேசிகத் தோடி தாளம் ஆதி

மதுராபுரி என்ற மெட்டு

பல்லவி

கந்த நாதா கருணை புரியவருங்

அநுபல்லவி

கலியுக கதிபெற மதிதருந் ததிகுண (க) 3

1 கனமா மனமே குணமே கனமே
இனமோ சுகுணமே எனையாதரி தினம் (க)

2 அடரா திடையே நடையே கொடையே
புடையூ ருடையே திடரா னுவஜெய (க)

3 மதியைத்துதி செய் வீதியைத் ததிகொய்
ததியைத் திதிமெய் திதியை தினமகிழ் (க)

4 மடமே நடமே குடமே தடமே
விடமீதினிலே நடமாடுவோன் சுதா (க)

சரணம்

5 மதிஞூர மதிகுண மகிழுவ கோனே
மகபதிமகள்தனின் மனக்குண வானே
கதியளித்திடும் பரங்கிரிவளர் வோனே
கருதுஞ்சின் ஞுத்திமொழிக் கருள்தாவே லோனே (க)

---

இராகம் பியாகு தாளம் ஆதி

அடங்களும் ஜெகஜோதி என்ற மெட்டு

கண்ணிகள்

1 நடந்திடும் மயில் மிசைதனி லமர்ந்திடும்
அடங்களும் ஜெகமகிதலம் முழங்கிடும்

ஆறுமாமுகப் பூசிதா ஆச்சி தெய்வானை
அன்போ டமைந்த வாசதா

2 தடங்க சிந்திடும் மதுதின குறவள்ளி
யிடம் நடந்திடும் சரவண பதிருல
சாமி சந்தாசல வேலா தமியேன் உன்னை
தஞ்சமென் றேனனுகூலா

3 சதங்கை கலகல வெனப்புவி துலங்கிட
பதங்களுனதிரு பதமனுதினம் பெற
பாலாபிஷேகநெய் வேத்யம் பரங்குன்றிலென்
னாலும் சங்கீணைகள் வாத்யம்

4 பம்பம் பம் சங்கு முழங்கிடும்
தம்தம் மென்றே தவுளடிபடும்
கும்பமுனிக் குபகாரன் கொண்டாடுவோரை
அன்பு பாராட்டுந் தீரன்

5 தாவரம்புல வாரதி யோதிடும்
மாதவன் மருகா தினம் மேவிடும்
சங்கச் சடாக்ஷரந் தோனே சின்னாத்திஉன்னை
எங்கே சென்றாலும் விடேனே

77577

## திருப்புகழ்

கண்டகண்ட துந்திமி என்ற மெட்டு.

1 செஞ்சதங்க ளம்பணி துலங்கிடும் பரமணின்
குலந்தனில் பிறந்திலங்கும் குமரேசா

2 மங்களம் விளங்கிடும் பிரசங்கமுந் துலங்கிடுபொன்
தங்கிடுங் கடம்பணிந்த அமர்வாசா

3 அண்டரண்ட ரெண்டிசைகள் மண்டலம்பூ மண்டலத்தில்
தொண்டர் விண்டுகொண்ட பூசை பெருவோனே

4 சண்டராவணங் குலங்கள் வென்றுசிறை மீட்டியகோ
தண்டபாணியான அரி மருகோனே

5 கெங்கை தங்குஞ் சங்கரனு ரின்புதல்வ னாகவந்து
செந்திலம் பதிக்குகந்த வடிவேலா

6 துங்கமயி லாசனத்தி லெங்குமே விழங்கிடவந்
திங்கெனக் கொருவரமே தருமேலா

7 மாங்கனி தனக்குவலம் ஓங்கியே நடந்து செங்கை
வாங்கியே செந்தில்ச் சுகிந்திங் கருள்வோனே

8 பாங்குடன் தண்டாயுதங் கொண்டோங்கிய அரக்கர்தலை
மாய்ந்திடத் தகித்தருண மயிலோனே

9 அம்பிலுயர் தம்பிரானுக் கின்பமா யமைந்த பாலா
உம்பர்முத லோருக்கருள் தருவோனே

10 வெம்பியேசின் னாத்திஉன்னை இன்பமோடிசை உரைக்க
அன்புகொண்டு துன்பமறும் பெருமாளே

---

பியாண்டு மெட்டு

கண்ணிகள்

1 ஞானப் பரம்பொருளே எப்போக்
கா[illegible] துன்னருளே இந்த
நரகாஜன னுனைமேவியே பரமோக்ஷமே பெறலாமென
நானுன்னை நம்பினேன் வா வனத்
தேனுமா வுண்ட தேவா

2 கானகத்தேமர மானவனே உன்னை
கனவாகிலும் மறவேனுனை எணையாதரி முருகாபதி
காசல வேலா கந்தா உடைக்
காயாச மேலணிந்தாய் (ஞா)

3 வேசையர் ஆசை உல்லாசமிகுத்து நான்
விருதாவிலே அலையாமலே குருவாகவே வருவாய்சிவ
சின்மை யானந்த வேலா எனக்
குண்மை பொருந்தும் மூலா (ஞா)

4 சினத்தோடு சூரன் சிரத்தை அறுத்தவா
சிகிவாகன மதிலேறியே மகிழ்வாயிங் கெனைக்கோறியே
சேயன்சொல் கீர்த்தி வேலா
சின்னுத்தி சொல்லான மூலா (ஞா)

---

இராகம் காபி தாளம் ஆதி

பழனியில் வாழ்முருகேசா என்ற மெட்டு

பல்லவி

சிரகிரிகுமரேசா கலிதீர்த்திடும் முருகேசா பிரக்யாசா (சி)

அநுபல்லவி

1 திகிரி சூலாயுதத் தோடமைந் தோனே
சிகிமிதி லாசனம் மீதமர் வோனே
திருப்பரங் கிரியோனே வேலோனே (சி)

2 சரவணைதனி லவதரித்து வந்தோனே
சரிகமபதநிச சாபல்யத் தோனே
சாம்பவி மோகக்ஷனே கோமானே (சு)

3 மயூரமீ தேறிமாங் கனிக்கிவந் தோனே
மான்மகள் குஞ்சரி மகிழுப கோனே
மாவடி வேலோனே பூமானே (சு)

4 வேடுவர் வனமதில் வேங்கை யானோனே
வெருண்டுகுற வரைக்கண் டரண்டொழிந் தோனே
விரிகுண மயிலோனே செந்தேனே (சு)

5 பாவிசூரனை வெட்டிப் பழிகளிட் டோனே
பாரில் துதிப்பவருக் கருள் தருவோனே
பாலன்சின் னத்திதானே சொல் தேனே (சு)

---

இராகம் தேசிகத் தோடி தாளம் ரூபகம்

பாலோனே என்ற மெட்டு

பல்லவி

முருகோனே முனிவருக்கருள் அரி மருகோனே

அநுபல்லவி

மோக்ஷதிபதி சடக்ஷர தெரிசன (மு)

சரணம்

1 தாவரமேவிடும் மாவடி யோனே
தங்கிடு மங்களம் செங்கடம் போனே
பூபரங்கிரிவளர் புனிதவே லோனே
பூமா னேமா க்ஷேம புரிவளர் (மு)

2 அகலிக்கி வரமளித் தானுந்தன் மாமன்
அவனியில் விளங்குது அரியென்ற நாமன்
புகழ்ஜெய மருகனே போற்றமுன் சேமன்
புண்ய கண்ய உன்னித ஜெயகன (மு)

3 மலைமுனிக் கருளதை மனமுட னளித்தாய்
மலையடி திருப்பரங் கிரிலவ தரித்தாய்
வளைய லுடனேவனக் கிழவடி வெடுத்தாய்
வாச னேச பூஜித மிகு குண (மு)

4 வனமதில் கனிவேங்கை மரமாகின் றோனே
வசமாயி லுடஜெக நடமிடு வோனே
குணமுடனே சின்னுத்தி தமிழறி வோனே
சோது தீதில் லாது உரையருள் (மு)

இராகம் தேசிகத்தோடி தாளம் ஆதி

தினந்திருக் கலியாணமகத்துவம் என்ற மெட்டு

பல்லவி.

விகசித பிரபஞ்சாச்சர மணிந்திடும் வேலா
சித்தர் கொண்டாடும்

1 வித்தகர் பக்தர் போற்றியே பரங்கிரி வாழ்
வித்தகர் பக்தர் போற்றியே

அடுக்கு சந்தம்

2 விரிமன திரிசடை மதுரிதமகிழ் கொடை (வே)

3 விரித்து மயில்நடம் புரித்து சேவல்கை தரித்து அனு
தினகரித்து வின்புல (வே)

4 வினையின்பயனே துணையுன்மனமே தினமுங்
கனமே மனமுங்குணமே (வே)

5 இத்தரையில் பக்தியுடன் னித்தமுனை நத்தினேனே (வே)

6 வேறெனக்கெதி யாருமிப்பதி கூறிடத்ததியாரிருப்பது(வே)

7 வெம்பினே னிதுசதி யாகுமோ உன்பதம்
நம்பினேன் கைவிடப் போகுமோ நின்சதம் (வே)

8 வெற்றியேசின் னுத்திஉன்னை பற்றியே பதங்களு
மியற்றியே ததிங்கினத்தோம் சாற்றியே நிதங்கணங்கொள்

---

இராகம் தேசிகத்தோடி தாளம் ஆதி

பல்லவி

வந்தாடுங் குன்றை நாடியே வானவர் கூடி (வ)

அநுபல்லவி

1 வாகனமா மயில்காவடி யாடி
ஏகவேகத்துடன் வேலனைத் தேடி (வ)

2 வரமும் பெறவும் திறமுந் தரவும்
பரவுங் கரமுஞ் சிரமுற்றிடவும் (வ)

3 இத்ததி மகத்துவ மதத்தரை மனத்தினில் மணித்தகம்
னித்தமுறை சித்தமுட னித்ததிகொள் (வ)

4 வாசியிலேரிடும் மேவிசு வாசனை
பூசுரர்போற்றிடு வார்செக தீசனை (வ)

5 செந்திலம்பதி தங்கினுங்கதி கந்தனுந்ததி வந்திலங்குதி(வ)

6 அரியின் திருமால் மருகன் குமரன்
வருகும் சமரர்க் கருளுந் தருவான் (வ)

சரணம்

7 ஆதினங் கொண்டாடுஞ் சத்தி
அன்பன் செந்தமிழ் சின்னுத்தி
வேதமங் களேகமுத்தி
வெற்றிச் சங்குசத்த மெங்கும்
சுத்திகோபுரத் திலங்கும் (வ)

---

இராகம் தாளம் ரூபகம்

தொகையறு கண்ணிகள்

1 செந்தமும் பூந்துலங்கும் கந்தன் மகிமை யெங்கும்
சந்தோஷமானவை வேலா வேலா வேலா

2 சந்தாசலக் குமரா மைந்தன் எனக்கு நேராய்
அந்தரங்கத்தனு கூலா கூலா கூலா

3 அத்தி உரித்தோன் மகனே சத்தியுமையாள் சுதனே
வித்தகர்பூ சித்திடுங் கோனே கோனே கோனே

தொகையறு

குறமாது புனமேவி தினமாவருந்தி முன்
குடவாவி சென்ற குகமே
அரனார் தனக்குமுன் மகனாயுதித்த ஜெக
அண்டத்தின் தொண்டர் சுகமே

பாட்டு

4 வாலியைக்கொன் றோனின்திரு மாலின்மரு கா உன்னிரு
பாலனைக் கண்பார்க்க வொண்ணாதா நாதா நாதா

5 வேலனே இன் னாளிலனை பாலனுங்கொண் டாடுவேனே
மூலமந்திரத்தைச் சொல்நீதா நீதா நீதா

தொகையறு

காக்ஷிதா என்றுனைக் கைகூப்பி நின்றிட்ட
கன்னியப் பெண்கள் கோடி
மாக்ஷிமை தங்கிய ஆக்ஷிதெய் வானையுடன்
மயில்மீ திருந்து நாடி

பாட்டு

6 அன்பன்கொண்ட தமிழை இன்பங்கொண்டே நாடியே
நம்பியேசின் ஞத்திசொல் நாடி நாடி நாடி

---

இராகம் கானடா தாளம் ஆதி

பல்லவி

பரனருளால் வந்த முருகா உனக்கிந்த
பஜனைக்குன் னருள் தந்தாள்

அநுபல்லவி

1 பலனது தருமெனத் தொழும் அடியார்தனை
பந்தபாச மெல்லா மகன்றிட
வந்துதங் தருளுந்த நண்டிட
பகராருமறை முறைக ளரிபென
திறமைக ளுரவே வரமருளுஞ் சிவ (பர)

2 தேவா உனதுசித்தம் மேவுவோரனு தினம்
தேனருங்கிரி திருப்பழனிமலை
யோனிரங்கிய விருப்பமுட னாலை

திடத்தை எடுத்துஎன் னிடத்தி லுரைத்திட
நடத்திச்சி கியைஓரி டத்தில் குறித்திடாய் (பர)

3 சர்ச்சனர் கள்கொண் டாட்டம்
சாதுக்க ளுன்முன் னாட்டம்
சந்தசா ஹஸசகித வேலா
உந்தனரு மலர்தொழுப ராளாய்
சனத்தில் மனத்திலுன் பதச்சின் னத்திசொல்
அருத்த முறைத்திட வருத்த மின்றியே (பர)

---

இராகம் மத்யமாவதி அட தாளம்

முருகன் திரு மால்மருகன் என்ற மெட்டு

பல்லவி

கழுகாசல பதியில்வாழ் வேலா ஒரு
கனவாகிலென் முனமேவியே
கனிவாயுரை முருகா திருக் (க)

அநுபல்லவி

1 சரஹணபொய்கை நிரஞ்சன வேலா நான்
சாற்றுமுறையுன் செவியிற் கேளாதா

பிரபஞ்ச தொந்தை விலக்கிடவொண்ணாத
பிசாதிருகுருவா எனக்கருகா சுலந்திருவாசுக (க)

2 குன்றுடைந்தண்ட பாணியுன்னை நாடி
கொண்டாடுங்காவடி நின்றுன்னைத் தேடி
பண்டாரக் கூட்டங்களுந்தனைப் பாடி
பதிவான தோர்நதி மூழ்கியே
அதிவானவர் துதிமேவிடும் (க)

3 காத்திகைப்பெண்க ளனைவர்கொண் டாடும்
கர்த்தனருளைப் புவியெங்கும் பாடும்
சாஸ்திரவேதச் சடாக்ஷரத் தோடும்
க்ஷணமாகிலும் எனையாதரி
முருகா அரி மருகா திருக் (க)

4 சித்திரவேடக் குறத்திமுன் சென்றவா
சின்மயானந்தம் பரங்குன்றம் நின்றவா
பக்தன் சின்னாத்தி தமிழ்கருள் கொண்டவா
பரலோகதிபதி மேவியே
தருவாய் ஒருவரமாகிலும் (கழு)

இராகம் தேசிகத்தோடி தாளம் சாப்

பண்டாரத் தண்டாயுதா என்ற மெட்டு.

பல்லவி

சண்முக மெஞ்ஞானமே சகலமலே கனமே (ச)

அநுபல்லவி

சந்தா னிங்கீர்த கந்தா அந்தரி மைந்தாவந்தருள்
தந்தாளுங்குக (ச)

சரணம்

1 தந்தைகுருவாக வந்தாய் தஞ்சைகிரி மேலமர்ந்தாய்
பஞ்சையருக் கேயுகந்தாய்
பாரங்கிரிவளர் தலம்புகழ் ஜெய
பலாபிஷேக கந்தா பழனிமலை யமர்ந்தாய் (பா)

2 சூரர்குலக் கருவருத்தாய் வீரமுடியேதரித்தாய்
நாரதர்சொல் கேமிகுத்தாய்
நரைதிரைபெரு வடிவெடுத்தாய்
நாட்டிய கூட்டதேவா நடனமயில் மீதேவா (நா)

3 காவிஉடை யேதரித்தாய் கர்த்தனின் குலத்துதித்தாய்
மேவுவோரை ஆதரித்தாய்
விமலிபாவகா நிதமெனக்கருள்
மேதாவிநோத கர்த்தா மேலும் விளங்கும் பத்தா (மே)

4 ஈராரு கரவடிவேல் எங்கும் புகழ்தமிழ் கேள்
வேராருங் கெனக்கருகே
விடைதந்துடனே நடமயிலேறி
வேதாந்தமான தேத்தி விளம்பு வேன்சின்னாத்தி (வே)

---

இராகம் தேசிகம் தாளம் ஆதி

கண்ணிகள்

1 பண்டாரத்ண்டா பாணியே பழனிமலை (ப)
பாமணியாகுண மாமணி யேதினம்
எமனும் வந்திடா தேயருள் தந்திடும் (ப)

2 பழமுதி பதிலிரு பதமென பணிகுவேன்
தாண்டவ தோனின் புத்திரா தல்லையம்பதி

தாண்டவ தோனின் புத்திரா
தகதக தகவென சதுர்நடமடித்து
வெருவித அமரர்கள் மனமகிழ் கூத்து (ப)

3 சப்தமகத்துவ ரித்தரைக் குள்தர
அண்டருளகச் சோதியே ஆனந்ததீபம்
அண்டருளகச் சோதியே
அரகரா வெனஉன திருபதம் போற்றி
சரவண பவனின்முன் கருமலர் சாற்றி (ப)

4 பக்கத்துணை மிக்ககுரு நிக்கப் பயமுற்றிட
ருத்ராக்ஷ கண்டா மணியே மாயக்கணியே
ருத்ராக்ஷ கண்டா மணியே
மாதவர்யோகிக ளாதவருந் தொழ
நிதசின் ஞத்தி தமிழ்கரு ளுந்தர (ப)

இராகம் பியாகு தாளம் ஆதி

பல்லவி

கந்தாகடம் பவிமோக்ஷணமே கருணையது
தந்தாள் சடாக்ஷர மேசுபமே

775

அநுபல்லவி

1 அந்தரி அம்பிகையாள் மைந்தனே கந்தமெய்யா
அங்கவளங்கிடும் மங்கள கல்யா
ணங்கள் துலங்கிடும் சங்கரன் மெய்ய (க)

2 தோகைமயி லூற்றோனே ஆகமங்கள் கற்றோனே
சோமவி சுந்தர சாமிசு தந்திர
நேமிவரந்தர வாமி துரந்தரா (க)

3 மாவைத் தேனுண்ட வாயா கோவைமுன் சென்ற நேயா
மாமக ளுங்குற பூமணி குஞ்சரி
க்ஷேமமேனே வள்ளி வனந்தனில் சஞ்சரி (க)

4 பழனி குகந்தஞானி பண்டாரத் தண்டபாணி
பஞ்சைகளுக் கருள் சஞ்சலமேற்றிடும்
கெஞ்சிவருஞ்சனத் தஞ்சமெனத்திரு (க)

5 மொட்டையுடன் லங்கோடும் கட்டுங்காயா சப்ஒடும்
முழுமனபஞ் சாக்ஷர மதுபூசி
பழுதரச்சின்னூத் திருகவி காச்சி (க)

இராகம் தேசிகதோடி தாளம் ஆதி

வேகமயிலேரும்வேலா என்றமெட்டு பல்லவி தொடர்ச்சி

பல்லவி

தாபரமெங்குந் துலங்குந்தீப மங்களா வேலா
தீபமங்களா
கோபாலன் மருகா குனங் குடிவேல் முருகா (தா)

1 பாலாபிஷேகா பழனி விசாகா
பரமனருமை பாலா பதவி கோலா பாரின்
பலஞ்சொல் மூலா

2 சூலாயுதக் கோலனே சுப்ரமண்ய வேலோனே
துடிசூரரைக் கொன்றோனேவடி வேலனே நட
மயில் லோலனே

3 ஆலத்தை யுண்டோன் பாலா பாலக்குறத்தி லோலா
அண்டியவர்க் கனுகூலா ஆண்டி வேலா பாருள்
ஆண்ட சீலா

4 தேவியுமைக் கமைந்த சித்திர மைந்தா கந்தா
தினையதிற் கேகிச்சென்று தேனையுண்டு மானைக்
காணேமென்று

5 மாவடிவேளா மகிமை கொண்டாளாய்
மைந்தன் சின்னாத்தி தமிழ் மங்களமே உல
கெங்கினுமே (கா)

---

இராகம் இந்துஸ்தான் தோடி தாளம் ஏகம்

தேவி குமாராகந்த என்ற மெட்டு

பல்லவி

ஆனந்தம் ஆனந்தமே ஞான அருமறை புகழ் (ஆ)

அநுபல்லவி

அருமைக்கந்தா திரமிருந்த வரதஞானப் பரம மைந்தா (ஆ)

சரணம்

1 மாஙுபி மானபங்க ளானமெஞ் ஞானசங்க
காணக்கண்ணுன தங்க
மாமயில் மிசையே தனித்திடும்
கோமகன் மகளே சுகித்திடும் (ஆ)

2 சேக்ஷமாபதி துலங்கும் சேஞ சைன்ய மிலங்கும்
நேமதுதி மூலங்கும்
நித்திய உத்தம வித்துவருக் கதி
தத்துவ சித்தப்ர சுத்த மகத்துவ (ஆ)

3 தசரதருக்கு பேரா தாபர தாபரசங்கச் சிங்காரா
நிசமானந்தக் கெம்பீரா
நீயன்றி வேறு துணையுண்டோ சொல்லுவாய்
சையோகவள்ளி சுகத்தோனே விள்ளுவாய் (ஆ)

4 சங்கச் சடாக்ஷரமே ஓங்கும் புகழ் தலமே
பூங்கமழுங் குலமே
போற்றுஞ் செந்தமிழ் கானசுகந்த சின்
முத்தி பந்தம சுற்றிட வந்தருள் (ஆ)

# விஷ்ணு துதி.

இராகம் மத்யமாவதி அடதாளம்

திரிலோகமும் என்ற மெட்டு

பல்லவி

அரிஓம்என்று தினமுறை மனமே அருள்
அன்போ டின்பம் நம்பியே தினம் (அரி)

அநுபல்லவி

1 மிருகாஜென நாய்நரிகள் போலே
திரியாதே நீ அறிவுண்ட தாலே
பெரியோருரை முறைதெரிக்காலே
பேரின்பந்தாரும் என்றுடுஞ் சென்றே தினம் (அ)

2 வெரியோடுர வாடித் திரியாதே
விஷசேஷ சயனை மறவாதே

பரநாரிய ரோடு மருவாதே
பந்தம் புரிந்து வைகுந்த கோவிந்தனை (அ)

3 நித்யானந்த ஞானந்தனை தேடு
நினையாதிருந் தா லேவருங் கேடு
வித்வான்மொழி யானதனைப் பாடு
விண்டுங்கை கொண்டுமுன் னின்றவன் தொண்டுசெய் (அ)

4 கருணாகரா கவிமனமது
புரிகாரணா வெனத்தினம் ஓது
சிறியேனுரை முறை தெரியிது
சிந்தித்து சின்னாத்தி உந்தன் நாமம் வத்தி (அ)

இராகம் செஞ்சுருட்டி தாளம் ரூபகம்

பல்லவி

அரிராம் ராம் ஜெயகுணமே உனே
நம்பினேனா னனுதினமே

அநுபல்லவி

நகரதிசுக ஜெகபுக ழுதிவிகசித (ரா)

சரணம்

1 பாம்போசயனவிதாரா திருப்
பாற்கட லுலவியதீரா
தேன்பாலபிஷேக மாரா திருத்
திகழ்வுரு விகசித நவரசஜெய அரி (ரா)

கெஜல்

பூபாலர்க்கருளும் உபகார க்ஷேமா
போற்றுமடி யார்க்குதவி யான ராமா

முடுகு

2 புலவர்களதிசுக பஜனையினதி ஜெய (ரா)

கெஜல்

கோதண்டமே கொண்டுபுவி யாண்டவா
கோறினோர் இன்பமனமகிழ் கொண்டவா

முடுகு

3 கரங்குவித்துச் சின்னுத்திமொழி மனத்தைத் திரித்திசுகம்(ரா

---

இராகம் மத்யமாவதி அடதாளம்

பல்லவி

ராமநாமமே துதித்

தாடிக் கொண்டாடி முன்னுடி கண்டாடுவோம் (ரா)

அநுபல்லவி

தோம்தத்தித் தோமென நான் நித்தம் ஆடுவேன் (ரா)

சரணம்

1 காமன் தந்தை பரந்தாமனே என்றுன்னை
கண்டே துயர் விண்டே முன்னின்றே களிகொண்டாடுவேன்

2 அண்டர்கள் கொண்டாடும் கோதண்டம் கைகூடும்
அதிரூபனே திருமாதவா ஒருபோதிலும் மறவாமலே (ரா)

3 ஆனந்தக் கூத்தாடு வேனுந்தன் கீர்த்தி கண்
டருள்கொண்டு புவிமண்டல தலமெண்டிசை மொழியுண்
டுன (ரா)

4 தொண்டர்க்கு தொண்டனுகக் கொண்டாடுவேனுன்
துடியாகவே நடமாடிஎன் னிடரோடிட விடைதந்திட (ரா)

5 துத்திமத்தாள சுதித்தாள கீதம் சிறு
பக்தன் சின்னுத்தி பதத்தின்நல முத்தியருள் (ரா)

---

இராகம் தேசிகம் தாளம் ஏகம்

பவுனகிரி என்ற மெட்டு

பய்லவி

சிரங்கமலே கரங்குவித்தோர் ஜெயமாவா ரகுபதியால்

அநுபல்லவி

1 நிரஞ்சன மேவரம் பெறுவோம்

நித்தியம் இத்ததி பக்தியுடன் துதி (சி)

தொகையரு

அரிநமோ நாராயணா வென்றே னனுதினம்
அருளெனக் களிக்க வாவா
திரிலோக மும்புகழும் ஜெகஜோதியே மிகும்
திவ்யப்ரகாச தேவா

அநுபல்லவி

2 அபிஷேக மணி சுகுணா
அன்புட னும்பர்கள் நம்பிடுஞ் சம்பிரமச் (சி)

தொகையரு

தவமேபுரிந்து நெடுநாளும் நொந்தேன்
தையல் சீதா சமேதா
தவராது வந்து படிமீதிருந்து
தருவாய் கடாக்ஷம் நீதா

அநுபல்லவி

3 பணிகுவோமே நலமுரத்தினம்
பக்தன்னின் றுத்திசொல் இத்தின முத்திகொள் (சி)

இராகம் செஞ்சுருட்டி தாளம் ஆதி

சுயராக்ஷியமதிக என்ற மெட்டு

கண்ணிகள்

1 சிரங்கமலை யில்வளர் ஸ்ரீரங்கதேவா
சிறக்கபணிந் மேதனுந்தன் சேயன் முன்வா
ஜெயக்கரகோ தண்டங்கொண் டாடிடும் பூவா
ஜெகமதி லதிசெய செல்வனே வா

கெஜல்

அகரமே குடிகொண்ட அஷ்டஜெக ஜோதியே
அகிலாண்ட சுககண்ட மிகுஞான நீதியே

பாட்டு

2 அருளதுபுரி கிருபாகரச் சோதியே
அனைவர் கொண்டாடுங் துதிக்கருள் நீயே
அரவசயனபெரு மாளெனத் துதியே
அடிக்கடி தொழுவே னுன்னிட சேயே

கெஜல்

மாயஉடல் சதமென்று காயமே நிசமென்று
ஆசைகொண்டு
நேசமுடன் வேசையர்க ளாசையது மீறிவிசு
வாசமென்றே

3 விளிவிலேந்து சுகஞானங்களை மறந்து
மானிட ஜெனன மாயேன் வந்தோம்
கானிலுலவும்சில நாய்நரி போலலேந்து
காங்குவித்து சின்னுத்தி தமிழ் அணிந்தோம் (சி)

---

இராகம் செஞ்சுருட்டி அடதாளம்

பல்லவி

1 நந்தகோபாலன் சுதா நாடலந்த கோவிந்த பாதா
பெரும் நருமாதர்கள் துயில்வாரியே
விரை வோடியே மரமேறின
நாகசயன சீதா பரம்நாடு நாதாந்தத் வீதா

தொகையரு

கோபாலருடனே நீ பாலவடிவச் சிங்
குழலோசையுற்ற நேமா
பூபாலர் மெச்சிட ஆவினம் ஓட்டிய
புனிதகுல மணியே ராமா

பாட்டு

2 கஞ்சன் சிரம் அறுத்தாய் அன்னை தந்தையற்
கேசுருத்தாய்
வருங்கண ராக்ஷச முனைவீரரை ஒருநேரமே உயிர்
போக்கிடக்
கண்டனஞ் செய்தவனே புவிஅண்டம் பேர்கொண்டவனே

தொகையரு

ஆயர்மனைகுடிமேவி மாயமது கொண்டுபால்
ஆடைதயி ருண்ட கோமா
நேயமுடனே தெருவிலேகி விளையாடியே
நிலத்திலே மண்ணுண்ட பூமா

பாட்டு

3 காண்டிபனை ஆண்டவா திருகோதண்ட பாணியே வா
உயர் கருணாகரா பரிபூரண திருமாதவா அரியோமெனச்
சின்னாத்தி செந்தமிழ்கே சேயன்
சொல்வாக்கும் உந்தனுக்கே

இராகம் செஞ்சுருட்டி தாளம் ரூபகம்

### கண்ணிகள்

விபரீதகுணமணி மலைகள்வினவின கனதன மங்களமே

வெகுசடைமதுரித பசுபதிபரிதன விளம்பின தலம்புகழ்
[மங்களமே

கனகனவெனமணி கலகலவெனஒலி கதிதருவெனதிரு
[மங்களமே

கருணைகள் அருள்புரி திருப்பரங்கிரிவளர் சரஹன
[வெனகுண மங்களமே

கஜமுக கணபதி விதமென துதிபுரி கடகரிவடிவமே
[மங்களமே

தசரத சுதனெனும் அரிசுக பஜனையை துதித்திடும்
[அடியவர் மங்களமே

நடனமுடனடியார் தொழுதிடும் சிறுவர்கள்
[நவிலுவருனதிரு மங்களமே

திடமுடனுனதடி பணிந்திட வரமருள் சிறுவன்
[சின்னுத்திசொல் மங்களமே

சுபம் சுபம் சுபம்